சுருக்கம்

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடிநீர்வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டத்தினை ரூ. 550 கோடியில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2008–2009ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறை மூலம் செயல்படுத்தப்படவுள்ள 80 பணிகளுக்கு ரூ. 24,61,23,000/– – ஒப்பளிப்பு – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி(ஆர்.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.243 நாள் 5.8. 2008

ஆடி 21,

திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்க

அரசாணை(நிலை) எண். 198, பொதுப்பணி(ஆர்.2)துறை, நாள் .6.2008.

மீண்டும் படிக்க

தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை கடித எண். எப்.1/3000/2008, நாள் 23.4.2008, 25.4.2008 , 8.5.2008 மற்றும் 5..6.2008.

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்டப் பேரவையில் 23.1.2008 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழ்நாட்டில் நீர் பற்றாக்குறை பகுதிகளில் வரும் நிதியாண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீர் ஓடைகளில் பயன்படுத்தப்படாமல் போகும் நீரினை தடுப்பணைகள் கட்டி சேமித்து அதனை ஆண்டு முழுவதும் அப்பகுதிகளுக்கான குடிநீர் மற்றும் வேளாண்மை ஆகியவற்றிற்கு பயன்படுத்துவதற்கான பெரும் திட்டம் (Master Plan) செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் 2008–09ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும் இத்திட்டம் இந்த நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து முதன்மை தலைமைப் பொறியாளர் நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர்( பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் 2008–09 முதல் 2010–2011 வரையிலான மூன்று ஆண்டுகளில், மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும்திட்டத்தினை

(Master Plan) ரூ. 550.00 கோடி மதிப்பீட்டில் நிலத்தடி நீர் தொடர்புடைய துறைகள் செயல்படுத்த, அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டன. 2008–09ம் நிதியாண்டில் பணிகளை மேற்கொள்ள நீர்வள ஆதாரத் துறைக்கு ரூ. 48.00 கோடி, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்திற்கு ரூ. 2.00 கோடி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ரூ. 24.00 கோடி, வேளாண் பொறியியல் துறைக்கு ரூ. 25.00 கோடி, வனத்துறைக்கு ரூ. 1.00 கோடியும் ஆக மொத்தம் ரூ. 100.00 கோடி நிதியொதுக்கமும் செய்யப்பட்டது. ரூபாய் 1.00 கோடிக்கு மேற்பட்ட ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான விரிவான திட்ட மதிப்பீட்டினையும், ரூ. 1.00 கோடிக்கு உட்பட்ட பணிகளுக்கான மதிப்பீடுகளை ஒரே தொகுப்பாகவும் பெற்று நிதித் துறையின் இசைவோடு சம்பந்தப்பட்ட துறைகள் நிருவாக ஒப்புதல் வழங்கிடவும் ஆணையிடப்பட்டது.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) தமது கடிதத்தில் 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறை மூலம் ரூ. 24,61,23,000/– மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள 80 தடுப்பணைகள் / குட்டை அமைக்கும் திட்டங்களுக்கான மதிப்பீடுகளை அனுப்பியுள்ளதோடு, இதற்கு அரசின் ஒப்புதலை பெற்றுத் தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தலைமைப் பொறியாளர்(திட்ட உருவாக்கம்) அவர்களது கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து,, மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், ஊருணிகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் பெரும் திட்டத்தின் கீழ், 2008–09ம் ஆண்டில் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் ஒரு கோடிக்கு உட்பட்ட 80 பணிகளை ரூ. 24,61,23,000/– மதிப்பீட்டில் (ரூபாய் இருபத்து நான்கு கோடியே அறுபத்தொன்று இலட்சத்து இருபத்து மூவாயிரம் மட்டும்) அதனதன்படி பிரித்து செயல்படுத்துவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகின்றது.

5. மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: -

> “4702–00–சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு–102. நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநிலத்திட்டம் –JC.மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புத் திட்டம் – 16. பெரும் பணிகள்”.
> (த. தொ.கு.4702–00–102–JC–1601)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினமான ரூ. 2461.23 இலட்சங்களை பெற்று வழங்க முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை (மற்றும்) தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை – 5 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலும், எதிர்பாரா செலவினங்கள்(Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள்(Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள்(Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான செலவினத்தில் 2.5%க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 40290/பொ.ப.II/2008 நாள் 9.7.2008ல் பெறப்பட்ட இசைவோடு வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி )

எஸ். ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும்
தலைமைப் பொறியாளர்(பொது), சென்னை–5
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சேப்பாக்கம், சென்னை–5
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்),
தரமணி, சென்னை –113.
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித்தலைவர், தருமபுரி/கிருஷ்ணகிரி/சேலம்/ நாமக்கல்/விழுப்புரம்/பெரம்பலூர்/
திருச்சிராப்பள்ளி/கடலூர்/ஈரோடு/கோயம்புத்தூர்/மதுரை/திண்டுக்கல்/
தேனி/தூத்துக்குடி/விருதுநகர்
மாநில கணக்காயர், சென்னை–18/ பெயரில்
சம்பள கணக்கு அலுவலர்(கிழக்கு) சென்னை – 5
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, சென்னை–25
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–9
பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை–5
தலைமைப் பொறியாளர்(வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை–35
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர்,வனத்துறை , சென்னை–6
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்) சென்னை–9
நகல்
நிதித்துறை (பொ.ப.II) /வேளாண்மை/சுற்றுச் சூழல்/ நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9
இ.கோ/உ.கோ.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

<u>**இணைப்பு**</u>

அரசாணை (நிலை) எண். 243, பொதுப்பணி(ஆர்.2)த்துறை, நாள் 5.8.2008

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி கிராமத்தில் புல எண் 121 இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 10.50 |
| 2 | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், கொட்டப்பட்டி கிராமத்தில் புல எண் 187 இல் கல்லார் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 26.50 |
| 3 | தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், செல்லம்பட்டி கிராமத்தில் புல எண் 16 இல் வன்னியார் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 52.00 |
| 4 | தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா கடத்தூர் கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 17.50 |
| 5 | தர்மபுரி மாவட்டம், பென்னகரம் தாலுகா பெரும்பாளை கிராமம், ராணிபட்டி அருகில் உள்ள உறனுமந்தராயபள்ளம் குறுக்கே குளம் அமைக்கும் திட்டம் | 41.15 |
| 6 | தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா புலித்தியூர் கிராமம் புல எண் 23 இல் வன்னியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 44.50 |
| 7 | தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா கே. புதுப்பட்டி கிராமம் புல எண் 29 இல் வன்னியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 47.50 |
| 8 | கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகா பற்றஉறள்ளி கிராமம் மாத்தூர் ஆற்றின் குறுக்கே தடுப்பணைஅமைக்கும் திட்டம் | 38.33 |
| 9 | சேலம் மாவட்டம், கங்கவல்லி தாலுகா, கள்ளிப்பட்டி கிராமம் புல எண் 11 இல் எழுத்துகள் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 39.60 |
| 10 | சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுகா, பால்பக்கி கிராமம் புல எண் 114 இல் சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 24.00 |

| | | |
|---|---|---|
| 11 | சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் போப்பம்பாடி கிராமத்தில் புல எண் 84 இல் நாத்தியாம்பட்டி அருகில் சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 33.30 |
| 12 | சேலம் மாவட்டம், கொட்டத்துப்பட்டி அருகில் அனுப்பூர் கிராமத்தில் புல எண் 27 இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 19.30 |
| 13 | சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் கோணப்பட்டி கிராமத்தில் புல எண் 172 இல் சரபங்கா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 21.35 |
| 14 | சேலம் மாவட்டம், சேலம் தாலுகா வீராணம் கிராமத்தில் புல எண் 57 இல் திருமணி முத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.51 |
| 15 | சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் ஆட்டுக்காரனூர் அருகே ஓமலூர் கிராமத்தில் புலஎண் 89ல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 31.70 |
| 16 | சேலம் மாவட்டம், சேலம் தாலுகா குப்பனூர் கிராமத்தில் புல எண் 24 இல் திருமணி முத்தாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.60 |
| 17 | நாமக்கல் மாவட்டம், திருசெங்கோடு வட்டம் படைவீடு கிராமத்தில் புல எண் 224 இல் பெரும்பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 17.75 |
| 18 | விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம் பாதூர் கிராமத்தின் அருகில் கே. கள்ளகுறிச்சியில் குளம் அமைக்கும் திட்டம் | 12.50 |
| 19 | பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தாலுகா வாலாஜா நகரம் கிராமத்தில் புல எண் 298 இல் மருதையாற்றின் உபநதியான கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 26.40 |
| 20 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா கல்பாடி கிராமத்தில் இரயசமுத்திரம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 9.25 |
| 21 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா கல்பாடி கிராமத்தில் இரயூர் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.30 |
| 22 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா, கல்பாடி கிராமத்தில் நெடுவாசலில் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 30.85 |
| 23 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா,வரகுபாடி கிராமத்தில் வரகுபாடி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 19.69 |

| | | |
|---|---|---|
| 24 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா,புதுநடுவலூர் கிராமத்தில் புல எண் 40 இல் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.60 |
| 25 | பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தாலுகா,புதுநடுவலூர் கிராமத்தில் புல எண் 92 இல் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 11.10 |
| 26 | பெரம்பலூர் மாவட்டம், குன்னம் தாலுகா,சிலகுடி தெற்கு கிராமத்தில் புல எண் 35 இல் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.75 |
| 27 | பெரம்பலூர் மாவட்டம்,அரியலூர் தாலுகா பார்பனசேரி கிராமத்தில் புல எண் 123 இல் மருதையாற்றின் உபநதியான சம்பா ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 23.15 |
| 28 | பெரம்பலூர் மாவட்டம்,அரியலூர் தாலுகா மல்லூர் கிராமத்தில் புல எண் 406 இல் மருதையாற்றின் உபநதியான மாணிக்கவாசகர் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 15.07 |
| 29 | பெரம்பலூர் மாவட்டம்,அரியலூர் தாலுகா நொச்சியம் கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 21.66 |
| 30 | பெரம்பலூர் மாவட்டம், புன்னம் வட்டம், சிலக்குடி கிராமம் புல எண் 187 இல் மருதையாற்றின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 38.75 |
| 31 | பெரம்பலூர் மாவட்டம்,அரியலூர் வட்டம் புதுப்பாளையம் கிராமத்தில் மருதையாற்றின் உபநதியான நவலூர் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 24.16 |
| 32 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், புலிவளம் கிராமத்தின் அருகே உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 21.50 |
| 33 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், பிரமங்கலம் கிராமத்தின் அருகே உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 19.20 |
| 34 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், பிரமங்கலம் கிராமத்தின் அருகில் திருச்சி–துறையூர் சாலையில் தொலைக்கல் 1650 மீ. கீழ்பகுதியில் உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 15.60 |

| | | |
|---|---|---|
| 35 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், வீரணி கிராமத்தின் அருகில் திருச்சி–துறையூர் சாலையில் தொலைக்கல் 2900 மீ. கீழ்பகுதியில் உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 15.10 |
| 36 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தின்னனூர்–சாத்தனூர் சாலையில் தொலைக்கல் 750மீ. மேல் பகுதியில் தின்னனூர் அருகில் உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 10.00 |
| 37 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தின்னனூர், சாத்தனூர் சாலையில் தொலைக்கல் 300 மீ. கீழ்பகுதியில் தின்னனூர் கிராமத்தின் அருகில் உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 13.50 |
| 38 | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம்,புலிவளம் தின்னனூர் சாலையில் தொலைக்கல் 1250 மீ கீழ்பகுதியில் தின்னனூர் கிராமத்தின் அருகில் உப்பார் ஒடையின் உபநதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 12.70 |
| 39 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,மங்கப்பட்டிபுதூர் கிராமத்தில் தொலைக்கல் 1540 மீட்டர் மேற்பகுதியில் துறையூர் தம்மப்பட்டி சாலையில் தளுகை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 10.95 |
| 40 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,கோலப்பட்டி கிராமத்தில் புல எண் 131 இல் குண்டாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 28.00 |
| 41 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,மங்கப்பட்டி புதூர் கிராமத்தில் அருகில் துறையூர் தம்மப்பட்டி அருகில் தொலைக்கல் 540 மீ மேற்பகுதியில் தளுகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 10.80 |
| 42 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,மங்கப்பட்டி புதூர் கிராமத்தில் அருகில் துறையூர் தம்மப்பட்டி தளுகையாற்றின் மேற்கு பகுதியில் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 7.80 |
| 43 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் அருகில் தொலைக்கல் 7250மீ தளுகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 16.60 |
| 44 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் அருகில் தொலைக்கல் 10500மீ தளுகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 22.90 |
| 45 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், கோப்பம்பட்டி கிராமத்தின் அருகில் தொலைக்கல் 11750 மீ தளுகையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 15.40 |
| 46 | கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கச்சிமயிலூர் கிராமத்தில் குட்டை அமைக்கும் திட்டம் | 20.70 |
| 47 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், ராஜநகர் கிராமத்தில் புல எண் 254 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 42.60 |

| | | |
|---|---|---|
| 48 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் கிராமத்தில் புல எண் 105 இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 39.80 |
| 49 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் கிராமத்தில் புல எண் 292 இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 80.21 |
| 50 | ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசம்பாளையம் கிராமத்தில் புல எண் 587 இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 35.20 |
| 51 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொடிங்கியம் கிராமத்தில் புல எண் 15 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 20.10 |
| 52 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், புக்குளம் கிராமத்தில் புல எண் 1 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 42.00 |
| 53 | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், இலுப்பநத்தம் கிராமத்தில் எல்எருமைப்பள்ளம் குறுக்கே புல எண் 869 பி இல் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 75.00 |
| 54 | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காலம்பாளையம் கிராமத்தில் புல எண் 328 இல் வழுக்குபாறை பள்ளத்தின் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் | 37.10 |
| 55 | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காலம்பாளையம் கிராமத்தில் கெண்டபாடிபள்ளம் குறுக்கே புல எண் 190 & 195 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 30.35 |
| 56 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமத்தில் புல எண் 330 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 62.25 |
| 57 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பெரியப்பட்டி கிராமத்தில் புல எண் 350 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 44.75 |
| 58 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கட்டம்பட்டி கிராமத்தில் புல எண் 18 இல் நாகரகலண்டை சிற்றூரில் குட்டை அமைக்கும் திட்டம் | 33.35 |
| 59 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பூசநாயக்கன்தலை கிராமத்தில் புல எண் 15 இல் குட்டை அமைக்கும் திட்டம் | 39.90 |
| 60 | கோயம்புத்தூர் மாவட்டம், தெற்கு வட்டம், தேவராயபுரம் கிராமத்தில் புல எண் 876 இல் பெரியப்பள்ளம் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 15.00 |

| | | |
|---|---|---|
| 61 | கோயம்புத்தூர் மாவட்டம், தெற்கு வட்டம், மாதம்பட்டி கிராமத்தில் புல எண் 80/2 இல் பீட்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 18.00 |
| 62 | மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கச்சைகட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் | 46.50 |
| 63 | திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், ராஜதானிகோட்டை கிராமத்தில் பெரிய ஓடையின் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் | 37.00 |
| 64 | தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கிராமத்தில் முருகமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 28.50 |
| 65 | தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், எண்டபுலி கிராமத்தில் முருகமலை நகரம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 38.70 |
| 66 | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மயிலாடுபாறை கிராமத்தில்புல எண் 67 இல் ஏழுசுணை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 99.00 |
| 67 | மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், ராமய்யன்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் | 33.00 |
| 68 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், இரசக்கநாயக்கனூர் கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 69.00 |
| 69 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், உத்தமபுரம் கிராமத்தில் மஞ்சநூத்து ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 98.50 |
| 70 | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் தேவராம் , கிராமத்தில் டி. ரெங்கநாதபுரம் அருகில் கன்னிமார் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 50.50 |
| 71 | தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளம் வட்டம், தாண்டவன்காடு கிராமத்தின் அருகில் கருமேனியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 70.00 |
| 72 | தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளம் வட்டம், பிச்சிவிளை கிராமத்தின் அருகில் கருமேனியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 60.00 |
| 73 | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுக்கா ரெட்டியாப்பட்டி கிராமத்தில் புல எண் 5 இல் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 26.40 |
| 74 | விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், அப்பயன்நாயக்கன்பட்டி கிராமத்தில் வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 70.70 |

| | | |
|---|---|---|
| 75 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், நாகநல்லூர் கிராமத்தில் தளுகையாற்றில் எல்எஸ் 9500 மீட்டரில் ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டம் | 18.30 |
| 76 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,குண்டக்காடி தென்புரநாடு கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 11.70 |
| 77 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம்,கருவன்காடு கிராமம் , மற்றும் தென்புரநாடு கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 11.60 |
| 78 | தூத்துக்குடி மாவட்டம், மேல திருசெந்தூர் கிராமம் கனம் மிகுதி நீரினை சேமிக்க ஒரு தடுப்பணை அமைக்கும் திட்டம் | 34.00 |
| 79 | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், அரவான்குறிச்சி கிராமத்தில் ஓடும் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் | 18.60 |
| 80 | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், வெங்கடாசலபுரம் கிராமம் அருகில் துறையூர் திம்மம்பட்டி சாலையின் கீழ்புறத்தில் கஞ்சனார் குறுக்கே எல்.எஸ். 980 மீட்டரில் தடுப்பணை அமைக்கும் திட்டம் | 17.55 |
| | மொத்தம் | 2461.23 |

(ரூபாய் இருபத்து நான்கு கோடியே அறுபத்தொன்று இலட்சத்து இருபத்து மூவாயிரம் மட்டும்)

எஸ். ஆதிசேஷையா,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்